# கணிதம்

## பகுதி - 1

## வகுப்பு II

Mathematics
Part - 1
Tamil Medium

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

JT 397-1/Maths-2 (T) (Vol-1)

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர். எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன். என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன். எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala


*Website* : www.scertkerala.gov.in
*e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of Education, Government of Kerala

அன்புள்ள குழந்தைகளே!

கணிதம் தொடர்பான சில கருத்துகளை
நாம் அறிந்துள்ளோம்.
கணிதம் என்ற ஆழ்கடலின்
ஆழம் மிக அதிகம்.
உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து வாருங்கள்
கணிதக் கடலில் மூழ்கி
கதைகள் சொல்லியும் பாட்டுகள் பாடியும்
கூடி விளையாடியும் சிந்தித்தும் செய்து பார்த்தும்
முத்தெடுப்போம்.

அன்புடன்,

**முனைவர் எஸ். இரவீந்தரன் நாயர்,**
இயக்குநர்,
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவனந்தபுரம்.



# Text Book Committee

**K.R.Muraleedharan Pillai**
Senior Lect. DIET, Kollam.

**C. G.Sreekumar**
Govt. Co- operative LPS,
Irumponagod, Kollam.

**C.V.Sajeevan**
Korivil, ALPS, Thuruthi, Kasargod.

**M.Mahashkumar**
BRC.,Cheruvathur, Kasargod.

**G. Rajalakshmi,**
Unity AUPS,Monnarkad, Palakkad.

**C.K.Vijayan**
Headmaster, GTLPS, Kubara.

**Dhanesh**
AMLPS, Keelmuri, Randadhani.

**M.Kunjabdulla**
Mooeepoth,MUPS, Kozhikodu.

## Experts

**Dr.C.Goguladhasan Pillai**
Ex. Currikulam Expert, SCERT.

**C.Venugopal**
Asst. Professor, Govt.College of Teacher Education, Thiruvananthapuram.

## Artist

**N.T.Rajeev,** G.H.S.S. Thariyod, Wayanad

**Janu Manjeri**

**Santhosh Velliyanoor**

**T.A.Athulkumar**

## Acadamic Co-Ordinator

**Dr.S.Jayalekshimi**, Reserach Officer, SCERT

## Tamil Version

**Babu. S**
PD Teacher, GLPS, Devikulam. Idukki.

**Dominic Savio. J**
St.Francis Xavier's High School, Parisakkal. Palakad.

**Dr. M.Nainar**
Professor (Rtd), University College, Thiruvananthapuram.

**Robert Xavier. M**
Headmaster, ALPS, Attampathy. Palakad.

## Academic Co-ordinator

**Dr. Sahaya Dhas D, Research Officer, SCERT**


State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala

1. ஒரு விடுமுறைக் காலத்தில் ......... 07

2. வீடு நல்ல வீடு ..................................... 23

3. அளவுக்கு மீறினால் .......................... 44

4. பூக்களைத் தேடி .................................. 59



# 1

# ஒரு விடுமுறைக் காலத்தில் . . .

பட்டணத்தில் வசிக்கும் தமிழ்ச்செல்வி கிராமத்தில் வசிக்கும் தன் பாட்டி வீட்டிற்கு வந்தாள். நண்பர்களுடன் இணைந்து கிராமத்தின் எழிலைக் கண்டு இரசித்தாள். தோழி கதீஜா தமிழ்ச் செல்வியை வீட்டு முற்றத்திற்கு அழைத்து வந்தாள்.

# நெல்லி மரத்தின் அடியில்

தமிழ்ச்செல்வியும் நண்பர்களும் நெல்லிக்காய்களைப் பொறுக்கி எடுத்தனர்.

எண்ணிப் பார்ப்போம்.




நெல்லிக்காய்களைக் குழுக்களாக்குங்கள். எண்ணி எழுதுங்கள்.











யாருக்குக் கூடுதல் கிடைத்தது? ______

யாருக்கு மிகவும் குறைவாகக் கிடைத்தது? ______

நெல்லிக்காய்களைக் கேட்டு பிற நண்பர்களும் வந்தனர்.




கோகிலாவுக்கு கிடைத்த மொத்த நெல்லிக்காய்கள்

4 + 6 + 5

10 + 5 = ☐

ஒவ்வொருவரும் கீதாவுக்குக் கொடுத்த நெல்லிக்காய்களின் எண்ணிக்கையைப் பாருங்கள். பீட்டர் 3 சூரியா 5 கதீஜா 6

கீதாவுக்குக் கிடைத்த நெல்லிக்காய்கள் எத்தனை?

☐ + ☐ + ☐

☐ + ☐ = ☐

கோகிலாவிற்குக் கிடைத்த எண்ணிக்கைக்குச் சமம் ஆக கீதாவிற்கு மேலும் எத்தனை நெல்லிக்காய்கள் தேவை? ☐

## கண்டுபிடிப்போம்

கட்டங்களில் உள்ள எண்களில், நேராகவும் குறுக்காகவும் வரும் மூன்று எண்களை கூட்டிப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| 8 | 1 | 6 |
| 3 | 5 | 7 |
| 4 | 9 | 2 |

$8 + 1 + 6 =$

$6 + 7 + 2 =$

இதைப் போன்று பிற வரிசைகளையும் கூட்டிப் பாருங்கள். நீங்கள் கண்டறிந்தது என்ன?

## நாடக அரங்கு

நன்மை பொழுதுபோக்கு மையத்தின் 25-ஆவது ஆண்டுவிழா. நண்பர்கள் நாடகம் பார்க்கச் சென்றனர். பீட்டரின் இருக்கை எண் 36. இடது பக்கம் சூரியாவும் வலது பக்கம் தமிழ்ச் செல்வியும் அமர்ந்தனர். அவர்களின் இருக்கைகளைக் கண்டு பிடித்து எழுதுங்கள்.




பீட்டர்



சூரியா



தமிழ்ச்செல்வி




கதீஜா
45

மோகன்
23

பாலு
5

கோகிலா
28

கீதா
49

பீட்டரின் நண்பர்களும் நாடகம் பார்க்க வந்தனர்.

அவர்களின் இருக்கைகளையும் கண்டுபிடித்து எண்களை எழுதுங்கள்.

## கண்டுபிடியுங்கள்

18 க்கும் 20 க்கும் இடையில் உள்ள எண் எது? [ ]


10 வீதம் கூட்டி எண்கள் எழுதுங்கள்

| 19 | | | | | | | | 99 |
|---|---|---|---|---|---|---|---|---|

# எண்கட்டை விளையாட்டு

சூரியாவின் மாமா தந்த இரண்டு எண்கட்டை களைப் பயன்படுத்தி அவர்கள் விளையாடினர். சூரியா எண்கட்டையை உருட்டினான்.






சூரியாவுக்குக் கிடைத்த புள்ளிகள் எத்தனை?

நீலநிற எண்கட்டையில் 4 பத்துக்கள் = 10 + 10 +10 + 10 = 40


பச்சைநிற எண்கட்டையில் 6 ஒன்றுகள் = 1 + 1 +1 + 1 + 1 + 1 = 6

40 உம் 6 உம் 46


சூரியா பெற்ற புள்ளிகள் 46

நண்பர்களுக்குக் கிடைத்த புள்ளிகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.


**பீட்டர்**





**தமிழ்ச்செல்வி**




**கோகிலா**





**கதீஜா**



கூடுதல் புள்ளிகள் பெற்ற நபருக்கு முதல் பரிசு,

அதைவிடச் சற்று குறைவாகப் பெற்றவருக்கு இரண்டாம் பரிசு


என்றிவ்வாறு பெரிய எண்ணிலிருந்து சிறிய எண் வரை வரிசையாக எழுதுங்கள். அவர்களின் பெயர்களையும் எழுதுங்கள்.




நீங்களும் எண்கட்டையை வைத்து விளையாடுங்கள். பெற்ற புள்ளிகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

## நண்பர்களிடம் கேளுங்கள்






கேள்வி : பத்துக்கள் என்னிடம் ஒன்றுண்டு
ஒன்றுகள் என்னிடம் ஆறுண்டு
நான் யார் என்று சொல்லுங்கள்?

பதில் : சொல்வேன் சொல்வேன் பதினாறு

இதைப் போன்று நண்பர்களிடம் நீங்களும் கேளுங்கள்.

## எண் எது?

மாதிரியில் தரப்பட்டுள்ளதைப் போன்று வெளிவட்டத்திலுள்ள எண்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.



# ராணியும் குழந்தைகளும்




## இப்படி விளையாடலாம்

- ஒரு பெரிய ஈர்க்கில்குச்சியும் (ராணி) 10 சிறிய ஈர்க்கில்குச்சிகளையும் (குழந்தைகள்) எடுங்கள்
- அவைகளை ஒன்றாகக் களத்தில் இடுங்கள்.
- பெரிய ஈர்க்கில்குச்சி ஏதாவது ஒரு சிறிய ஈர்க்கில்குச்சியிலாவது தொட்டு இருக்க வேண்டும்.
- இனி ஒரு ஈர்க்குச்சியால் ஒவ்வொரு ஈர்க் குச்சியையும் எடுக்க வேண்டும். அப்பொழுது பிற ஈர்க்கில்குச்சிகள் அசையக் கூடாது.
- ராணிக்கு 10 புள்ளிகள், குழந்தைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு புள்ளி வீதம்.
- ஒவ்வொரு விளையாட்டிலும் புள்ளிகள் கணக்கிடப்பட வேண்டும்.
- இரண்டு அல்லது மூன்று முறை விளையாட வேண்டும்.
- கூடுதல் புள்ளிகள் பெற்றவர் வெற்றி பெறுவர்.

மூன்று முறை விளையாடிய பின்னர் அவர்களுக்குக் கிடைத்த புள்ளிகளைப் பாருங்கள்.

| பெயர் | ராணி | குழந்தைகள் | பத்துக்கள் | ஒன்றுகள் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| பீட்டர் | | | 2 | 8 | 28 |
| கோகிலா | | | | | |
| கீதா | | | | | |
| கதீஜா | | | | | |
| சூரியா | | | | | |
| தமிழ்ச்செல்வி | | | | | 29 |

கூடுதல் புள்ளிகள் பெற்றது யார்?

புள்ளிகளை ஏறு வரிசையில் எழுதுங்கள்.

எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?

ஒரு ராணியின் புள்ளிக்குச் சமமாக எத்தனை குழந்தைகள் தேவை?

தமிழ்ச்செல்விக்கு 29 புள்ளிகள் கிடைத்தன.

எத்தனை ராணிகள் கிடைத்திருக்கும்? ☐ குழந்தைகள்? ☐


## எண் எது?

**பத்துக்கள் எங்களில் நான்கும்**
**ஒன்றுகள் எங்களில் மூன்றும்**
**பத்துக்கள் ஒன்றுகள் சேர்ந்தால்**
**நான் யாரென்று சொல்லுங்கள்?** ◯

**பத்துக்கள் நாங்கள் ஒன்றுகளாக**
**ஒன்றுகள் நாங்கள் பத்துக்களாக**
**இடம்மாறி நின்றோம் என்றால்**
**நான் யார் என்று சொல்லுங்கள்?** ◯

## கைப்பந்து விளையாட்டு

நன்மை கிளப்பின் 25-ஆம் ஆண்டு விழாவின் இரண்டாம் நாள். சூரியாவும் தமிழ்ச்செல்வியும் பீட்டரும் அங்கு வந்தனர். ஒலிபெருக்கியிலிருந்து அறிவிப்பு வந்தது.



அணிகள் பெற்ற புள்ளிகள் கரும்பலகையில் உள்ளன. விடுபட்டவற்றை நிரப்புங்கள்

மூன்று சுற்றுகளில் இரண்டில் வெற்றி பெற்றால் கோப்பையைக் கைப்பற்றலாம்.



| சுற்று | புள்ளிகள் | |
|---|---|---|
| | ஒற்றுமை அணி | நன்மை அணி |
| 1 | 20 | |
| 2 | | 22 |
| 3 | 21 | 25 |



மூன்றாவது சுற்றில் வெற்றி பெற்ற அணியை ஒலிபெருக்கியின் வாயிலாகக் கூறுங்கள்.

போட்டியில் வெற்றிபெற்ற அணி எது?

## எண் எது?

| | |
|---|---|
| 23 உடன் 5 ஐக் கூட்டினால் கிடைக்கும் எண் | |
| 30 லிருந்து 2 ஐக் கழித்தால் கிடைக்கும் எண் | |
| 28 ஒன்றுகள் சேர்ந்த எண் | |
| 1 பத்தும் 18 ஒன்றுகளும் சேர்ந்த எண் | |
| 2 பத்துக்களும் 8 ஒன்றுகளும் சேர்ந்த எண் | |

இதுபோல் 16 விடை வருமாறு எழுதுங்கள்.

| 16 | |
|---|---|
| | |
| | |
| | |
| | |

# டாமினோ விளையாட்டு

சூரியா, தமிழ்ச்செல்வி, பீட்டர் வீட்டை அடைந்தார்கள்.








டாமினோ விளையாட்டு எப்படி விளையாடுவது என்று ஆசிரியர் சொல்லித் தந்துள்ளாரல்லவா?

டாமினோவைப் பாருங்கள். ஒவ்வொருவர் பெற்ற புள்ளிகளை எழுதுங்கள்.

சூரியா பீட்டர் தமிழ்ச்செல்வி




விளையாட்டில் வெற்றி பெற்றது யார்?

தமிழ்ச்செல்விக்குக் கிடைத்தைவிட சூரியாவிற்கு எவ்வளவு குறைவு கிடைத்தது?

8 உடன் எவ்வளவு கூட்டினால் 13 கிடைக்கும்?

$8 + 5 = 13$ அல்லவா


அப்பொழுதும் 5 மட்டுமே கிடைக்கும்.

13 லிருந்து 8 ஐ கழித்தால்

$13 - 8 = 5$

அப்படியென்றால் 5 புள்ளிகள் குறைவு

- பீட்டரைவிடத் தமிழ்ச் செல்விக்குக் கிடைத்த கூடுதல் புள்ளிகள் எத்தனை?
- சூரியவிற்கும் பீட்டருக்கும் கிடைத்த புள்ளிகளின் இடையிலுள்ள வித்தியாசம் எவ்வளவு?
- அடுத்த விளையாட்டில் சூரியாவிற்கு மேலும் 10 புள்ளிகள் கிடைத்தன. என்றால் அவன் கையிலுள்ள டாமினோ எவையெல்லாம்?அடையாளப்படுத்துங்கள்.



# திருவிழா

தமிழ்ச்செல்வி நாட்காட்டியைப் பார்த்தாள்.







**மே 2015**

| SUN ஞாயிறு | MON திங்கள் | TUE செவ்வாய் | WED புதன் | THU வியாழன் | FRI வெள்ளி | SAT சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

மே 23 என்ன கிழமை? ______







தமிழ்ச்செல்வி ஊருக்குச் செல்லும் நாள் எது? ______

வெள்ளிக்கிழமை எந்தெந்தத் தேதிகளில் வருகிறது?
வரிசையாக எழுதுங்கள்.

______ ______ ______ ______ ______

சனிக்கிழமை வரும் தேதிகள் எவை?

______ ______ ______ ______ ______

இந்தத் தேதிகளுக்கு இடையேயுள்ள தொடர்பு என்ன?

நான் கண்டறிந்தவை :

______

திருவிழா வந்தது.


அனைவரும் குளித்துப் புத்தாடை அணிந்தனர்.

## திருவிழா

விழா விழா திருவிழா
எங்க ஊர் திருவிழா
வண்ண வண்ண தோரணம்
வான வேடிக்கை பலவிதம்
டும் டும் டும் டும் செண்டைமேளம்
தாளம் மேளம் நாதஸ்வரம்
பீப்பீ பீப்பீ குழலோசை
சல்சல் சல்சல் ஓசையுடன்
இணைந்து கேட்க இனிமையே
இதுவே எங்கள் இனிய விழா

மொத்தம் எத்தனை பேர்?

| | |
|---|---|
| செண்டை மேளக்காரர்கள் | |
| சால்ரா கருவி வைத்திருப்பவர்கள் | |
| கொம்பு ஊதுபவர்கள் | |
| மொத்தம் மேளக்காரர்கள் | |



# முத்துக்குடை

திருவிழாவிற்கு வந்த ஆட்கள் முத்துக்குடைகள் பிடித்து வரிசையாக நின்றனர். முத்துக்குடைகள் பார்ப்பதற்கு எவ்வளவு அழகு!

சூர்யாவும் தமிழ்ச்செல்வியும் முத்துக்குடைகளைப் பார்த்து நின்றனர்.




சிறிய முத்துக் குடைகள் மொத்தம் எத்தனை?

பச்சை நிற முத்துக் குடைகள்?

சிவப்பு நிற முத்துக் குடைகள்?

எந்த நிற முத்துக் குடைகள் அதிகம்?

எவ்வளவு அதிகம்?

# திருவிழா சந்தை

| விலை விவரப் பட்டியல் | |
|---|---|
| பொருள் | விலை ஒன்றிற்கு |
| பலூன் | 5 ரூபாய் |
| பந்து | 20 ரூபாய் |
| கார் | 16 ரூபாய் |
| பொம்மை | 15 ரூபாய் |
| பீப்பி | 6 ரூபாய் |



- சூர்யா ஒரு பலூனும் ஒரு புத்தகமும் வாங்கினான். மொத்தம் எத்தனை ரூபாய் தேவைப்படும்?
- சூர்யா மூன்று 10 ரூபாய் நோட்டுகள் கொடுத்தால் மீதி எத்தனை ரூபாய் கிடைக்கும்?
- பீட்டர் 21 ரூபாய்க்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்கினான். என்னென்ன பொருட்கள் வாங்கியிருப்பான்?
- இதில் உங்களுக்கு விருப்பமான இரண்டு விளையாட்டுப் பொருட்கள் எவை? எத்தனை ரூபாய் தேவைப்படும்?
- தமிழ்ச்செல்வியிடம் 20 ரூபாய் உள்ளது. எந்தெந்த விலையுள்ள விளையாட்டுப் பொருட்களை வாங்க இயலும்?

பாட்டி தமிழ்ச்செல்விக்கு வளையல் வாங்கிக் கொடுத்தார்.
10 வளையல்கள் உள்ள 2 பாக்கெட்டுகளும் 6 வளையல்களும்.

மொத்தம் எத்தனை வளையல்கள்? ☐

அந்த வளையல்களை இரண்டு கைகளிலும் போடவேண்டும்.

ஒவ்வொரு கையிலும் எத்தனை வளையல்கள் வீதம் போடலாம்?



| நான் கண்டறிந்தது | | நண்பன் கண்டறிந்தது | |
|---|---|---|---|
| இடது கை | வலது கை | இடது கை | வலது கை |
| 18 | 8 | | |



## செய்து பார்ப்போம்

- கட்டங்களை முழுமையாக்குங்கள்.

(நடுவில்: 36)

- ....... ஒன்றுகள்
- 3 பத்துக்கள் ...... ஒன்றுகள்
- 10 + 10 + ....... + 6
- 2 பத்துக்கள் .....ஒன்றுகள்
- 30 + .......
- ....... + 6

- எண் எது?

| | |
|---|---|
| 2 பத்துக்கள், 3 ஒன்று | |
| 4 பத்துக்கள் | |
| 14 ஒன்றுகள் | |
| 4 ஒன்றுகள், 3 பத்துக்கள் | |
| 1 பத்துக்கள், 14 ஒன்றுகள் | |

- எப்படி எழுதுவது?

| | |
|---|---|
| 32 | |
| 50 | |
| 18 | |
| 43 | |
| 26 | |

- ஒவ்வொரு வரிசையிலும் மிகப்பெரிய எண்ணிற்கு ✓ போடுங்கள் மிகச்சிறிய எண்ணிற்கு ◯ வரையுங்கள்.

| | | |
|---|---|---|
| 25 | 52 | 50 |
| 48 | 38 | 84 |
| 30 | 60 | 40 |
| 18 | 81 | 91 |
| 27 | 72 | 57 |

✓ அடையாளமிடப்பட்ட எண்களைச் சிறிய எண்ணிலிருந்து பெரிய எண்வரை வரிசையாக எழுதுங்கள்.

◯ வரைந்த எண்களைப் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்வரை வரிசையாக எழுதுங்கள்.

- கவிதா 10 வளையல்கள் வீதமுள்ள இரண்டு சிகப்பு வளையல் பாக்கெட்டுகளும் ஒரு கறுப்பு வளையல் பாக்கெட்டும் 8 பச்சை வளையல்களும் வாங்கினாள். அவள் மொத்தம் எத்தனை வளையல்கள் வாங்கியிருப்பாள்?

- குமாரும் அப்பாவும் அம்மாவும் அக்காவும் சினிமாவிற்குச் சென்றார்கள். 41 முதல் தொடர்ந்து வரும் 4 இருக்கைகள் அவர்களுக்குக் கிடைத்தன. இதில் கடைசி இருக்கையில் குமார் அமர்ந்தான். அவனது இருக்கை எண் எது?



# 2

# வீடு நல்ல வீடு

## தேனீ கண்ட வீடு

ஆகா அழகான வீடு !

அருமையான முற்றம் !

வசதியான திண்ணை !


சமையலறை, குளியலறை

படுக்கையறை...

இன்னும் பலவகை அறைகள்....

எனக்கேற்ற வீடு...

தேனீ வீட்டிற்குள் நுழைந்தது.



வீடு ஒன்று கட்டணும் - இதுபோல்

வீடு ஒன்று கட்டணும்


தேனீ ஆசைப்பட்டது.

அங்கும் இங்கும் பறந்தது.

அட்டை பலவும் எடுத்தது.

பொம்மை வீடு கட்டியே


பாட்டுப் பாடிப் பறந்தது.




## எண்ணுவோம் எழுதுவோம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள எத்தனை வடிவங்கள் படத்தில் உள்ளன?

 _ _ _

 _ _ _

 _ _ _

வரைவோம் - வண்ணம் தீட்டுவோம்.


## நான் வரைந்த வீடு


# பொம்மை வண்டி

தேனீ வீட்டைச் சுற்றிப் பறந்தது.

ஆ! அது என்ன?

ஆகா! அருமையான வண்டியிது!






பொம்மை வண்டியில் இவ்வடிவங்கள் எங்கெங்குள்ளன?

அங்கெல்லாம் இவ்வடிவங்களின் வண்ணங்களைத் தீட்டுங்கள்.


தொடர்ந்து வரவேண்டியதை வரையுங்கள்.



## முழுமைப்படுத்துங்கள்

விடுபட்ட பாகங்கள் வரைந்து வீட்டை முழுமைப்படுத்துங்கள்.

பொருத்தமான வண்ணம் தீட்டுங்கள்.



## ஒளிந்திருப்பது என்ன?

தொடர்ந்து வரவேண்டிய எண்களை எழுதுங்கள்.


12, 14, 16, 18, ....., ....., ....., ....., ....., ....., ....., 34

இவ்வெண்களை இணைத்து வரையுங்கள். ஒளிந்திருப்பதைக் கண்டுபிடியுங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 50 | 49 | 48 | 30 | 47 | 46 | 54 |
| 52 | 51 | 32 | 35 | 28 | 45 | 43 |
| 11 | 34 | 12 | 53 | 24 | 26 | 39 |
| 13 | 15 | 14 | 55 | 22 | 25 | 29 |
| 17 | 19 | 16 | 18 | 20 | 27 | 31 |

## காகித வீடு

காகித வீடு செய்யுங்கள். பொருத்தமான வண்ணம் தீட்டுங்கள்.



நீங்கள் செய்த வீட்டை இங்கு ஒட்டுங்கள்.

# வீடு கட்டுதல்




கிளி எவ்வளவு கொடுத்தது தெரியுமா?



7 பத்து ரூபாய் நோட்டுகள் = 70 ரூபாய்

5 ஒரு ரூபாய் நோட்டுகள் = 5 ரூபாய்

மொத்தம் = 70 + 5

= 75 ரூபாய்

கிளி மட்டுமல்ல. வேறு பலரும் கொடுத்தார்கள். ஒவ்வொருவரும் எவ்வளவு கொடுத்தார்கள் தெரியுமா? கீழே உள்ள பட்டியலைப் பார்த்துக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

| பெயர் | 10 ரூபாய் நோட்டுகள் | 1 ரூபாய் நோட்டுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| கிளி | 7 | 5 | |
| கரையான் | | | |
| சிலந்தி | | | |
| காகம் | | | |
| எறும்பு | | | |
| புறா | | | |

மிக அதிகமான தொகை கொடுத்தது யார்? ______

## ரசீது கொடுப்போமா?

பணம் கொடுத்தவர்களுக்கு ரசீது கொடுக்க வேண்டுமல்லவா?

அவர்களுக்கான ரசீதை எழுதுங்கள்.

ரசீது — எண் 56
பெயர் : கிளி
தொகை : 75 ரூபாய் (எழுபத்தைந்து ரூபாய்) ........(மட்டும்)
(ஒப்பு)

ரசீது — எண்
பெயர் : ........................
தொகை : ........................
........................(மட்டும்)
(ஒப்பு)

ரசீது — எண்
பெயர் : ........................
தொகை : ........................
........................(மட்டும்)
(ஒப்பு)

ரசீது — எண்
பெயர் : ........................
தொகை : ........................
........................(மட்டும்)
(ஒப்பு)

ரசீது — எண்
பெயர் : ........................
தொகை : ........................
........................(மட்டும்)
(ஒப்பு)

ரசீது — எண்
பெயர் : ........................
தொகை : ........................
........................(மட்டும்)
(ஒப்பு)

## பிற நன்கொடைகள்

மான் 42 ரூபாய் நன்கொடை கொடுத்தது. ரூபாய் நோட்டுகளும் நாணயங்களும் கலந்த நன்கொடையது. கீழே கொடுக்கப்பட்டுள்ள நோட்டுகளையும் நாணயங்களையும் பாருங்கள். அவற்றுள் மான் கொடுத்திருக்க வாய்ப்புள்ள நோட்டுகளுக்கும் நாணயங்களுக்கும் ✓அடையாளமிடுங்கள்.



இவை மயில் நன்கொடையாகக் கொடுத்த நோட்டுகளும் நாணயங்களும்.



மயில் அளித்த நன்கொடை எவ்வளவு? ☐

## நோட்டுகளாக்கலாம்

மொத்தம் 25 ஒரு ரூபாய் நாணயங்கள் கிடைத்தன.


அவற்றை நோட்டுகளாக மாற்ற வேண்டும். என்னென்ன நோட்டுகளாக மாற்றலாம்?

கட்டங்களில் எழுதுங்கள்.











## சிந்தனைக்கு....

மிக அதிகமான நோட்டுகள் வேண்டுமெனில் எப்படி மாற்றவேண்டும்?

மிகக் குறைந்த நோட்டுகள் போதுமெனில் எப்படி மாற்றவேண்டும்?

## வண்ணம் தீட்டுங்கள்



## தீப்பெட்டி வீடு



குரங்கண்ணனுக்கும் வீடு கட்ட ஆசைபட்டது. சாலை யெங்கும் சுற்றியது. தீப்பெட்டிகளைச் சேகரித்தது.

அவற்றை அடுக்கி வீடு கட்ட முயன்றது.
படத்திலுள்ள தீப்பெட்டிச் சுவரின்

ஒரு வரிசையில் எத்தனை தீப்பெட்டிகள் உள்ளன? ☐

இரண்டு வரிசைகளில் எத்தனை தீப்பெட்டிகள் உள்ளன? ☐

மூன்று வரிசைகளில் எத்தனை தீப்பெட்டிகள் உள்ளன? ☐

ஐந்து வரிசைகளிலும் சேர்ந்து மொத்தம் எத்தனை தீப்பெட்டிகள் உள்ளன? ☐

இதேபோல் 10 வரிசைகள் வைக்க எத்தனை தீப்பெட்டிகள் வேண்டும்? ☐


எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?

## பத்தாக....?

நண்பர்கள் குரங்கிற்கு உதவ நினைத்தார்கள். தீப்பெட்டிகள் சேகரித்து வந்தார்கள். அவரவர் கொண்டு வந்த தீப்பெட்டிகளை அடுக்கி வைத்தார்கள்.

மொத்தம் எண்ணிக்கை எவ்வளவு?

இதை 10 -இன் குழுக்களாக்கிப் பார்ப்போமா?



கடைசி வரிசையில் எத்தனை தீப்பெட்டிகள் உள்ளன? ☐

இரண்டாவது வரிசையிலுள்ள தீப்பெட்டிகள் எத்தனை? ☐

இரண்டாவது வரிசை 10 ஆவதற்கு அதற்கு மேலேயுள்ள வரிசையிலிருந்து ஒன்றை சேர்க்கவும்.

மூன்றாவது வரிசையிலுள்ள தீப்பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு? ☐

இது 10 ஆவதற்கு அதற்கு மேலேயுள்ள வரிசைகளிலிருந்து மேலும் 2 சேர்க்கவும்.

இதேபோல் பத்தின் குழுக்களாக மாற்றினால், பத்தின் எத்தனை குழுக்கள் கிடைக்கும்? ☐

மீதி எவ்வளவு? ☐

மொத்தத் தீப்பெட்டிகள்

☐ + ☐ = ☐



தீப்பெட்டிகள் சேகரியுங்கள்.
இதுபோல் செய்து பாருங்கள்.

## மொத்தம் எவ்வளவு?

தீப்பெட்டி வீடு கட்ட காகம் 34 தீப்பெட்டிகளும் குருவி 25 தீப்பெட்டிகளும் கொண்டு வந்தன. இரண்டும் கொண்டுவந்த மொத்தத் தீப்பெட்டிகள் எத்தனை?





| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| காகம் | 30 | + | 4 | = | 34 |
| குருவி | 20 | + | 5 | = | 25 |
| மொத்தம் | 50 | + | 9 | = | 59 |



JT 397-3/Maths-2 (T) (Vol-1)

## பழம் வாங்க....

காகத்திற்கும் குருவிக்கும் பழம் தின்ன ஆசை. காகம் 26 ரூபாயும் குருவி 33 ரூபாயும் கொண்டுவந்தன. அண்ணன் குரங்கினிடம் கொடுத்தன.

குரங்கு அண்ணனிடம் மொத்தம் எத்தனை ரூபாய் இருக்கும்?

26 ரூபாய்





___ ___

33 ரூபாய்





___ ___

மொத்தம் ___ + ___ = ___




குரங்கு அண்ணன் 55 ரூபாய்க்குப் பழம் வாங்கினான். அவனிடம் எத்தனை ரூபாய் மீதி இருக்கும்? ___

## எத்தனை?


“ஆகா நல்ல பழம்”. காகம் சொன்னது.

“புட்டுச் சுட்டு விளையாடலாமா?” குருவி கேட்டது.




இருவரிடமும் சேர்ந்து மொத்தம் எத்தனை கொட்டாங்குச்சிகள் உள்ளன?

## மண்புட்டு சுடலாமா?



காகமும் குருவியும் மண்புட்டுச் சுட்டு விளையாடத் தொடங்கியது.

காகம் 21 மண்புட்டுச் சுட்டது. குருவியோ 16 மண்புட்டுச் சுட்டது.

கூடுதல் மண்புட்டு சுட்டது யார்?

எத்தனை கூடுதல்?

இருவரும் சேர்ந்து சுட்ட மண்புட்டுகள் எத்தனை?

## குறும்புக்காரக் குரங்கு

"ஹாய்... மண்புட்டு" குறும்புக்காரக் குரங்கு குறுக்கே ஓடியது.


"ஐயையோ 7 புட்டுகள் உடைந்து போனதே!" இரண்டும் அழுதன.

உடையாத மண்புட்டுகள் எத்தனை?

## பாலு மாமா வீடு

காகமும் குருவியும் வருத்தத்தோடு பறந்தன. வழியில் பாலுமாமா வீடு கட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தன. அவர் அடுக்கி வைத்திருந்த கற்களில் அமர்ந்தன.

ஒவ்வொரு கூட்டத்திலும் எத்தனை கற்கள் உள்ளன?



மொத்தம் எத்தனை கற்கள் உள்ளன?

## 1 முதல் 99 வரை

1 முதல் 99 வரை உள்ள எண்களை எழுதுங்கள். அவற்றுள் 'ஒன்றின்' இடத்தில் '5' வரும் எத்தனை எண்கள் உள்ளன? அவை எவை?

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 15 | 25 | | | | | | | 95 |

எத்தனை எண்கள் உள்ளன? [ ]

விடுபட்ட எண்களை எழுதுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11 | 21 | | | | | | | 91 |
| 2 | 12 | 22 | | | | | | | 92 |
| 3 | 13 | 23 | | | | | | | 93 |
| 4 | 14 | 24 | | | | | | | 94 |
| 8 | | | | | | | | | |

'ஒன்றின்' இடத்தில் '1' வரும் எண்கள் எத்தனை? [ ]

'ஒன்றின்' இடத்தில் '2' வரும் எண்கள் எத்தனை? [ ]

'ஒன்றின்' இடத்தில் '3' வரும் எண்கள் எத்தனை? [ ]

'ஒன்றின்' இடத்தில் '4' வரும் எண்கள் எத்தனை? [ ]

'ஒன்றின்' இடத்தில் '8' வரும் எண்கள் எத்தனை? [ ]

## எத்தனை முறை

1 முதல் 99 வரை எழுதுங்கள். அவற்றுள் '7' என்ற எண் இடம் பெற்றுள்ள எண்கள் எவை?

அவற்றுள் 'பத்தின்' இடத்தில் '7' வரும் எண்கள் எவை?

ஒன்றின் இடத்தில் 7 வரும் எண்கள் எவை?


பத்து மற்றும் ஒன்றின் இடத்தில் 7 வரும் எண் எது?

## மணிச்சட்டம் (அபாகஸ்)


உங்கள் ஆசிரியை கூறும் எண்களை மணிச்சட்டத்தில் உருவாக்கிக் கண்டுபிடித்து எழுதுங்கள்.




மணிச்சட்டத்திலுள்ள எண் எது?





2









9





10









19




20





## சொல்லுங்கள்

மணிச்சட்டத்தில் ஒன்றின் இடத்தில் ஒரு முத்து சேர்த்தால் ஏற்படும் மாற்றம் என்ன?


பத்தின் இடத்தில் ஒரு முத்து சேர்த்தால் ஏற்படும் மாற்றம் என்ன?




## மணிச்சட்டம் செய்யலாமா?

*மணிச்சட்டம் உருவாக்குவது எப்படி என்று ஆசிரியரிடம் கேளுங்கள்*

இம்மணிச்சட்டத்திலுள்ள எண் எது? ☐





அதற்கடுத்த எண் எது? மணிச் சட்டத்தில் காட்டுங்கள். ☐




## மணிகள் வரைவீர்களா?

பத்தின் இடத்தில் 2; ஒன்றின் இடத்தில் 6;


எண் எவ்வளவு?




இப்பொழுது எண் எத்தனை? ☐


உங்கள் வகுப்பிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையை மணிச்சட்டத்தில் காட்டுங்கள்.

குழந்தைகளின் எண்ணிக்கையை எழுதுங்கள். ☐




## தொகை காண்போம்


விடுபட்ட கட்டங்களில் எண்களை எழுதுங்கள். தொகையை மணிச்சட்டத்தில் காட்டுங்கள்.




12 + 13 = 25




☐ + ☐ = ☐




☐ + ☐ = ☐

வகுப்பறையில் மணிச்சட்டம் பயன்படுத்தி எண்களின் தொகையைக் கண்டுபிடியுங்கள். நண்பர்களுடன் ஒரு போட்டி நடத்துங்கள்.



## செய்து பார்ப்போம்

### கோலிக்குண்டுகள் எத்தனை?



- கலைவாணனின் கையில் 23 நீல நிறக் கோலிக் குண்டுகளும் 16 வெள்ளை நிறக் கோலிக்குண்டுகளும் உள்ளன. மொத்தம் எத்தனை கோலிக்குண்டுகள்?
- பாலுவின் கையில் நீல நிறக் கோலிக்குண்டுகளும் வெள்ளை நிறக் கோலிக்குண்டுகளும் சேர்ந்து 48 கோலிக்குண்டுகள் உள்ளன. என்றால் நீலநிற கோலிகளும் வெள்ளை நிற கோலிகளும் எத்தனை வீதம் இருக்கலாம்?



### எவையெல்லாம் சேர்ந்தால்?

எந்தெந்த இரண்டு எண்கள் சேர்ந்தால் 38 கிடைக்கும். கோடிட்டு இணையுங்கள்.

24+12

10+28 — 38

16+12

21+17

23+13

**38**

20+18

15+23

16+22

23+25

14+23

### கூடுதல் யாருக்கு?

ரஹீமும் ஜோபினும் ஆளுக்கொரு புத்தகம் வாங்கினர். ரஹீம் 3 பத்து ரூபாய் நோட்டுகளும் 4 ஒரு ரூபாய் நாணயங்களும் கொடுத்தான். ஜோபின் 3 பத்து ரூபாய் நோட்டுகளும் 12 ஒரு ரூபாய் நாணயங்களும் கொடுத்தான். கூடுதல் தொகை கொடுத்தது யார்? [ ] கொடுத்த ரூபாய் எவ்வளவு? [ ]

## எண்ணடுக்கை முழுமையாக்குங்கள்

1) 12, 22, 32, ........, ..........

2) 25, 30, 35, ........, ..........


3) 4, 8, 12, 16, ........, ..........


4) 18, 16, 14, ........, ..........


5) 11, 22, 33, ........, ..........

## மணிச்சட்டத்திலுள்ள எண்

மணிச்சட்டத்திலுள்ள எண்களைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எழுதுங்கள்.









கட்டங்களிலுள்ள எண்ணை மணிச்சட்டத்தில் காட்டுங்கள்.


13




30




41





# 3

# அளவுக்கு மீறினால்...




மரகத நாட்டின் அரசர்
பெரிய சாப்பாட்டு ராமன்.
அவர் எப்பொழுதும்
சாப்பிட்டுக்கொண்டேயிருப்பார்.
சோற்றையும் குழம்பையும்
பலகாரங்களையும் பழங்களையும்
வாரி வழித்துத் தின்று
கொண்டேயிருப்பார்.

## எத்தனை மாம்பழங்கள்?

அரசரின் முன்னால் இரண்டு கூடை மாம்பழங்கள் வைக்கப்பட்டன. முதல் கூடையில் 60 மாம்பழங்களும் இரண்டாவது கூடையில் 30 மாம்பழங்களும் இருந்தன.

மொத்தம் எத்தனை மாம்பழங்கள்?





அரசர் மாம்பழங்களைத் தின்றார்.

முதல் கூடையில் 10 மாம்பழங்களும்
இரண்டாவது கூடையில் 5 மாம்பழங்களும்
மீதி இருந்தன.
அரசன் தின்ற மாம்பழங்கள் எத்தனை?

முதல் கூடையிலிருந்து தின்ற மாம்பழங்கள்

இரண்டாவது கூடையிலிருந்து தின்ற மாம்பழங்கள்

அரசன் தின்ற மொத்த மாம்பழங்கள்

| பத்துக்கள் | ஒன்றுகள் | |
|---|---|---|
| | | + |
| | | |
| | | |

நான் கண்டுபிடித்த வேறொரு முறை

..................................................................


..................................................................

..................................................................

## இனிப்புப் பலகாரம்

10 வீதம் லட்டுகளுள்ள நிறைய பாத்திரங்கள் இருந்தன.

அரசர் லட்டுகளைத் தின்னத் தொடங்கினார்.



காலையில் நான்கு பாத்திரங்களிலிருந்த லட்டுகளையும் ஐந்தாவது பாத்திரத்திலிருந்து 6 லட்டுகளையும் சாப்பிட்டார்.

காலையில் சாப்பிட்ட லட்டுகள் எத்தனை? ☐

மாலையில் சாப்பிட்ட லட்டுகள் எத்தனை என்று தெரியுமா?

மூன்று பாத்திரங்களிலிருந்த மொத்த லட்டுகளையும் வேறொரு பாத்திரத்திலிருந்து இரண்டு லட்டுகளையும் சாப்பிட்டார். காலையும் மாலையும் சேர்த்து அவர் சாப்பிட்ட மொத்த லட்டுகள் எத்தனை? ☐

நான் கண்டறிந்த முறை :

..................................................................

..................................................................

..................................................................

## லட்டுகள் எத்தனை?


இரண்டு தட்டுகளிலுமாக 55 லட்டுகள் உள்ளன. ஒன்றில் 15 லட்டுகள் உண்டெனில் இரண்டாவது தட்டில் எத்தனை லட்டுகள் இருக்கும்? ☐

## வாழைப்பழங்கள்


கேசவனும் ராமனும் அரசருக்கு வாழைப்பழங்களைக் கொண்டுவந்தனர். ஒவ்வொரு சீப்பிலும் 10 பழங்கள் வீதம் இருந்தன.



ஒவ்வொருவரும் எத்தனை பழங்கள் கொண்டு வந்திருப்பர்?



கேசவன்



ராமன்

கூடுதல் வாழைப்பழங்கள் கொண்டுவந்தது யார்?

எத்தனை கூடுதல்?

இரண்டு சீப்புகள் கூடுதல் = 20 பழங்கள்

மூன்று கூடுதல் = 3 பழங்கள்

மொத்தம் 20 + 3 = 23 பழங்கள் கூடுதல்






கேசவன் கொண்டுவந்த பழங்களிலிருந்து அரசர் 43 பழங்களைச் சாப்பிட்டார்.

கேசவன் கொண்டுவந்த பழங்களில் மீதி எத்தனை?

| | | |
|---|---|---|
| கேசவன் கொண்டுவந்தது | | பழங்கள் |
| அரசர் சாப்பிட்டது | | பழங்கள் |
| மீதி | | பழங்கள் |



78 லிருந்து 43 ஐக் கழிப்பது எப்படி? முதலாவதாக,
8 ஒன்றிலிருந்து 3 ஒன்றைக் கழித்தேன்.
அப்பொழுது மீதி 5 பின்பு 7 பத்துக்களிலிருந்து
4 பத்துக்களை கழித்தேன். அப்போது மீதி 3 பத்துக்கள்.
மொத்தம் 3 பத்துக்களும் 5 ஒன்றுகளும்
அதாவது 35

அதை இவ்வாறு எழுதலாம்.

| பத்துக்கள் | ஒன்றுகள் | |
|---|---|---|
| 7 | 8 | – |
| 4 | 3 | |
| 3 | 5 | |

ராமன் கொண்டு வந்த 55 பழங்களில் 32 பழங்களை அரசர் சாப்பிட்டார். என்றால் மீதி எத்தனை?

| பத்துக்கள் | ஒன்றுகள் |
|---|---|
| | |
| | | 
| | |

−

நான் கண்டறிந்த முறை


.................................................................................................

.................................................................................................

.................................................................................................


## கூட்டி எழுதுவோம்

அடுத்துள்ள இரண்டு கட்டங்களிலுள்ள எண்களைக் கூட்டி அதற்குக் கீழே உள்ள கட்டத்தில் எழுதுங்கள். எண் மாலையைப் பூர்த்தி செய்யுங்கள்.




## கோடிட்டு இணையுங்கள்

சரியான விடைகளைக் கோடிட்டு இணையுங்கள்.



## சத்துணவு

ஆனந்தனின் பள்ளியில் முட்டையும் பழமும் நல்குவது உண்டு. அவனது பள்ளியிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைப் பாருங்கள்.

| வகுப்பு | குழந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஒன்று | 58 |
| இரண்டு | 57 |
| மூன்று | 54 |
| நான்கு | 55 |




மிகவும் அதிகமான குழந்தைகள் உள்ள வகுப்பு எது? ☐

மிகவும் குறைவான குழந்தைகள் உள்ள வகுப்பு எது? ☐

ஒன்றாம் வகுப்பில் 35 பேர் முட்டை சாப்பிட்டார்கள். மீதியுள்ளவர்களுக்கு ஒவ்வொரு பழம் கொடுக்கப்பட்டது. என்றால் பழம் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்? ☐

இரண்டாம் வகுப்பிலும் மூன்றாம் வகுப்பிலும் 32 பேர் வீதம் முட்டை சாப்பிட்டார்கள். மீதியுள்ளவர்கள் பழம் சாப்பிட்டார்கள். நான்காம் வகுப்பிலுள்ள அனைவரும் முட்டை சாப்பிட்டார்கள்.



## பட்டியலை நிரப்புங்கள்

| வகுப்பு | முட்டை சாப்பிட்டவர்கள் | பழம் சாப்பிட்டவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| ஒன்று | | | |
| இரண்டு | | | |
| மூன்று | | | |
| நான்கு | | | |

## கணக்கெடுப்பு

தூய்மை தொடர்பான தகவல்கள் திரட்ட ஆனந்தனும் நண்பர்களும் 4 குழுக்களாக வீடுகளைப் பார்வையிட்டனர்.

47 வீடுகளைப் பார்வையிட்டனர். அவற்றுள் 32 வீடுகளில் கிணறுகள் உள்ளன.

கிணறு இல்லாத வீடுகள் எத்தனை?



ஒவ்வொரு குழுவும் சென்று பார்வையிட்ட வீடுகளின் சில தகவல்கள் பட்டியலில் தரப்பட்டுள்ளன. பட்டியலை முழுமையாக்குங்கள்.

| குழு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 24 | 22 | |
| 2 | 32 | | 58 |
| 3 | 23 | 16 | |
| 4 | | 35 | 55 |

மிகவும் கூடுதல் உறுப்பினர்கள் உள்ள வீட்டைப் பார்வையிட்ட குழு எது?

மிகவும் குறைவான உறுப்பினர்கள் உள்ள வீட்டைப் பார்வையிட்ட குழு எது?

## சுகாதார மன்றம்

ஆனந்தனின் பள்ளியில் நான்காம் வகுப்பில் 34 பேரும் மூன்றாம் வகுப்பில் 23 பேரும் சுகாதார மன்றத்தின் உறுப்பினர்கள் ஆவர். இரண்டு வகுப்பிலும் சேர்ந்து சுகாதார மன்றத்தில் எத்தனை பேர் உள்ளனர்.?

ஒன்றாம் வகுப்பிலிருந்து 17 பேரும் இரண்டாம் வகுப்பிலிருந்து 29 பேரும் மன்றத்தில் சேர்ந்தனர். ஒன்றாம் வகுப்பைவிட இரண்டாம் வகுப்பில் கூடுதலாகச் சேர்ந்தது எத்தனை பேர்? ☐

## கடைக்குச் செல்வோம்

சுத்தம் செய்யத் தேவையான கருவிகள் வாங்க 73 ரூபாய் ஆனது. ஆனந்தன் கடையில் 8 பத்து ரூபாய் நோட்டுகள் கொடுத்தான். மீதி எத்தனை ரூபாய் கிடைக்கும்?




## கட்டங்களை நிரப்புங்கள்

அருகிலுள்ள இரண்டு கட்டங்களில் உள்ள எண்களைக் கூட்டி அதற்குக் கீழேயுள்ள கட்டங்களில் எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 13 | 10 | 11 | 9 |
| | 21 | | |
| | | | |
| | | | |

## எண் மாலையை நிரப்புங்கள்

ஒரு வட்டத்திலுள்ள எண்ணில் இருந்து அதற்கு அடுத்த வட்டத்திலுள்ள எண் களைக் கழித்துக் கீழேயுள்ள வட்டத் தில் எழுதுங்கள்.



## விளக்குமார் தயாரிப்போம்



ஆனந்தனின் பள்ளியிலுள்ள குழந்தைகள் தினமும் பள்ளியையும் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்வர்.

“பள்ளியில் விளக்குமாரின் எண்ணிக்கை மிகவும் குறைவு” பாத்திமா கூறினாள்.

“ஒவ்வொருவரும் 10 ஈர்க்கில்குச்சிகள் கொண்டுவந்தால் மட்டும் போதும்; ஏராளம் விளக்குமார் தயாரிக்கலாம்”. செல்வன் கூறினான்.




ஒவ்வொருவரும் கொண்டுவந்த ஈர்க்கில்குச்சிகளின் எண்ணிக்கையை எழுதுங்கள்.

| பெயர் | பத்துக்கள் | ஒன்றுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| ரியா |  |  | |
| பாத்திமா |  |  | |
| செல்வன் |  |  | |
| தோமஸ் |  |  | |
| வினோத் |  |  | |

10 இன் எத்தனை கட்டுகள் சேர்ந்தால் 100 ஆகும்? 

மொத்தம் எத்தனை விளக்குமார் தயாரிக்கலாம்? 

மீதி வந்த ஈர்க்கில் குச்சிகள் எத்தனை? 

## 100 பல விதம்

...... பத்துக்கள்

...... ஒன்றுகள்

...... + ......

**100**


99 +

90 +

50 +

## கூட்டிப் பார்ப்போம்

படத்திலுள்ள எண்களில் இரண்டு வீதம் எடுத்துத் தொகை கண்டுபிடியுங்கள்.



## எண் விளையாட்டு

1 முதல் 5 வரையுள்ள எண்களை அட்டைகளில் எழுதுங்கள்.




1 2 3 4 5

அதில் அடுத்துவரும் இரண்டு அட்டைகளை எடுங்கள்.

அதைப் பயன்படுத்தி இரண்டு இலக்க எண்கள் உருவாக்குங்கள்.

எ.கா : 1, 2 எடுத்தால் உருவாகும் எண்கள்.

1 2     2 1

இதில் பெரியது எது?

12 உடன் எத்தனை சேர்த்தால் 21 கிடைக்கும்?

இனி அடுத்துவரும் வேறு இரண்டு அட்டைகள் எடுத்து இரண்டு இலக்க எண்கள் உருவாக்குங்கள். சிறிய எண்ணைவிடப் பெரிய எண் எத்தனை கூடுதல்? பிற அட்டைகள் எடுத்துச் செய்து பாருங்கள்.

கீழே தரப்பட்டுள்ள பட்டியலை நிரப்புங்கள்.

| எடுத்த எண்கள் | பெரிய எண் | சிறிய எண் | கழித்தபின் கிடைத்த எண் |
|---|---|---|---|
| 1, 2 | 21 | 12 | 9 |
| | | | |
| | | | |
| | | | |

கழித்தபின் கிடைத்த எண்களின் சிறப்பு என்ன?

## அட்டை விளையாட்டு

1 2 3

1, 2, 3 என்ற எண்களைப் பயன்படுத்தி உருவாக்கும் எல்லா இரண்டு இலக்க எண்களையும் எழுதுங்கள், ஒரு முறை எழுதிய எண்ணை மீண்டும் எழுதக்கூடாது.




மிகவும் சிறிய எண்

மிகவும் பெரிய எண்

## வரிசைப்படுத்துங்கள்


இந்த எண்களைச் சிறிய எண்ணிலிருந்து பெரிய எண் என்ற வரிசையில் வரிசைப்படுத்தி எழுதுங்கள்.



## செய்து பார்ப்போம்

**எண்படிகளை நிரப்புங்கள்.**

அடுத்த கட்டங்களிலுள்ள எண்களைக் கூட்டி அதன் மேலுள்ள கட்டங்களில் எழுதுங்கள்.




**தூய்மை**

அவரவர் வார்டை மிகவும் தூய்மையாக வைத்திருக்கத் தீர்மானித்தனர். அதற்கான கருவிகள் வாங்க ஒவ்வொரு வார்டிலுள்ளவர்களும் கடைக்குச் சென்றனர்.

விளக்குமார்



23 ரூபாய்

குப்பை வாரும்தட்டு



20 ரூபாய்

பிரஷ்



44 ரூபாய்

குப்பைத் தொட்டி



69 ரூபாய்

மிகவும் விலைகுறைந்த பொருள் எது?

மிகவும் விலை கூடிய பொருள் எது?

மனோகர் ஒரு பிரஷும் ஒரு விளக்குமாரும் வாங்கினான். இரண்டுக்கும் சேர்த்து அவன் மொத்தம் எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்?

குப்பைத் தொட்டி வாங்குவதற்காக அகிலா கடைக்குச் சென்றாள். குப்பைத் தொட்டியின் விலை 75 ரூபாய். அகிலாவின் கையில் 50 ரூபாய் மட்டுமே இருந்தது. குப்பைத் தொட்டி வாங்க மேலும் எத்தனை ரூபாய் அதிகம் வேண்டும்?





## பழக்கடை

ராஜனும் பைஸலும் பழக்கடைக்குச் சென்றனர்.

அவர்கள் 85 ரூபாய்க்குப் பழங்கள் வாங்கினர்.

100 ரூபாய் கொடுத்தார்கள்.

மீதி எத்தனை ரூபாய் திரும்பக் கிடைக்கும்?



சினிதா 10 ரூபாய்க்குக் கொய்யாப்பழங்களும் 20 ரூபாய்க்கு வாழைப் பழங்களும் வாங்கினாள். அவள் 50 ரூபாய் கொடுத்தாள். மீதி எத்தனை ரூபாய் கிடைக்கும்?


4

# பூக்களைத் தேட..



“ஹாய்! நல்ல மணம்”


சின்னு முயலும் மின்னு முயலும் பூந்தோட்டத்திற்குச் சென்றன. தேவையான பூக்களைப் பறித்தன. கை நிறைய பூக்களுடன் வீட்டை அடைந்தன. நண்பர்களும் அவற்றுடன் சென்றன.



“ஒரு பெரிய மாலை கட்டவேண்டும்” சின்னு முயல் கூறியது.

“ஒரு பூக்கோலம் போடவேண்டும்” மின்னுமுயல் கூறியது.


அவை பூக்களைத் தரம் பிரித்தன. கூடையில் நிரப்பின.





## எத்தனை பூக்கள்?


ஒரு பூக்கூடையில் 100 பூக்கள் வீதம் உள்ளன.


ஒவ்வொரு இனத்திலும் எத்தனை பூக்கள்? கண்டுபிடித்து எழுதுங்கள்.















## வரிசைப்படுத்துவோம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 100 | 200 | 300 | | | | | | |

## நாங்கள் எத்தனை பேர் என்று சொல்ல முடியுமா?

பூந்தோட்டத்திற்கு மேலும் பல உயிரினங்கள் வந்தன. அவையெவை என்று பாருங்கள்.

அவற்றின் எண்ணிக்கையைக் கட்டங்களில் எழுதுங்கள்.



நாங்கள் 100 வீதம் 4 குழுக்கள்



நாங்கள் 100 வீதம் 3 குழுக்கள்



நாங்கள் 100 வீதம் 2 குழுக்கள்

## மாலை கோர்க்கலாம்....

"முதலாவதாக நாம் மாலை கட்டுவோம்.

ஒரே இனத்திலுள்ள

10 வீதம் பூக்கள் கோர்க்கலாம்."

எல்லாரும் சம்மதித்தனர்.



மாலை கட்டியதைப் பார்த்தீர்களா?


எத்தனை பூக்கள் தேவைப்பட்டன?



எப்படிக் கண்டுபிடிப்பது? மாலையின் உட்புறக் கட்டங்களில் வரிசையாக எண்களை எழுதிப்பாருங்கள்.

மொத்தம் தேவைப்பட்ட பூக்கள் ☐

## பூக்கோலம் அமைப்போம்

பூக்கோலம் அமைக்க மின்னு முயலும் வீட்டிலுள்ளவர்களும் சேகரித்த பூக்கள் கீழே தரப் பட்டுள்ளன. எத்தனை என்று கண்டுபிடித்து எழுதுங்கள்.



| | | |
|---|---|---|
|  100 |  10 | ..... |
|  ..... |  20 | ..... |
|  ..... |  ..... | ..... |
|  ..... |  ..... | ..... |
|  ..... |  ..... | ..... |

## நாமும் மாலை கட்டுவோம்

பூக்கள் சேகரித்து வகுப்பிற்குக் கொண்டு வந்து நிறத்தின் அடிப்படையில் தரம் பிரியுங்கள்.

அவற்றை '10' இன் குழுக்களாக்கி மாலை கட்டுங்கள்.


- ஒவ்வொரு மாலைக்கும் பயன்படுத்திய பூக்கள்

  மாலை 1 ☐ மாலை 2 ☐ மாலை 3 ☐

- மிகவும் அதிகம் பூக்கள் பயன்படுத்திய மாலை எது? ☐
- அதில் எத்தனை பூக்கள்? ☐


## எண் மரம்

எண் மரத்தில் விடுபட்ட எண்களை எழுதுங்கள்.



## எண் கொடி






இலைகளில் வரிசையாக எண்கள் எழுதுங்கள்.




## மாம்பழங்கள் எத்தனை?

சின்னு முயலும் நண்பர்களும் மாம்பழங்கள் கொண்டு வந்தன.

மாம்பழங்களின் எண்ணிக்கையைக் கட்டங்களில் எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
|  |  | 1 |  | 101 |
|  |  | |  | 105 |
|  |  | |  | 109 |
|  |  | |  | |
|  |  | |  | |

## எண் தோரணம்


கீழே தரப்பட்டுள்ள தோரணத்தில் சில எண்கள் விடுபட்டுள்ளன.

அவ்வெண்களை எழுதி நிரப்புங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100 | 100 | 100 | 100 | | | | | | |
| 1 | 2 | 3 | | | | | | | |
| 101 | 102 | 103 | 104 | | | | | | |

## நண்பர்களும் பூக்களும்

மின்னு முயலின் நண்பர்கள் பூக்கோலத்தைப் பார்த்தனர். அவை பூக்கோலத்திற்கான பூக்கள் சேகரித்தன. பூக்களின் எண்ணிக்கையைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

| | நூறுகள் | பத்துக்கள் | ஒன்றுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
|  |  |  |  | |
|  |  |  | | |
|  |  | |  | |
|  | |  | | |

கூடுதல் பூக்கள் சேகரித்தது யார்? [ ]

## எண்கள் உருவாக்குவோம்

| வட்டம் | செவ்வகம் | முக்கோணம் |
|---|---|---|
| 100, 100, 100, 100 | 10, 20, 30, 40, 50, 60, 70, 80, 90 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 |

ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு அட்டை வீதம் எடுத்து எண்கள் உருவாக்குங்கள். ராஜேஷ் எடுத்த அட்டைகளைப் பாருங்கள்.

| வட்டம் | செவ்வகம் | முக்கோணம் | |
|---|---|---|---|
| 100 | 30 | 3 | 100 + 30 + 3 = 133 |
| 100 | 40 | 7 | ...... + .... + .... = ...... |

இனி நீங்கள் செய்து பாருங்கள்.

| வட்டம் | செவ்வகம் | முக்கோணம் | |
|---|---|---|---|
| | | | ...... + .... + .... = ...... |
| | | | ...... + .... + .... = ...... |
| | | | ...... + .... + .... = ...... |
| | | | ...... + .... + .... = ...... |

உங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய எண் எது? ☐

மிகவும் சிறிய எண் எது? ☐

# கடைக்குச் செல்வோம்

சின்னு முயலும் மின்னு முயலும் காய்கறிகளைக் கடைக்குக் கொண்டுசென்று விற்றன. சின்னு முயலுக்குக் கிடைத்த ரூபாய் நோட்டுகளைப் பாருங்கள்.



சின்னு முயலிற்கு எத்தனை ரூபாய் கிடைத்து?

மின்னு முயலிற்கு மூன்று 10 ரூபாய் நோட்டுகளும் ஒரு 100 ரூபாய் நோட்டும் ஒரு 5 ரூபாய் நோட்டும் கிடைத்தன.

மின்னு முயலிற்கு எத்தனை ரூபாய் கிடைத்தது?


கூடுதல் கிடைத்தது யாருக்கு?

எவ்வளவு கூடுதல்?

சின்னு முயலும் மின்னு முயலும் 100 ரூபாய் வீதம் அம்மாவிற்குக் கொடுப்பதற்காக மாற்றி வைத்தன. இனி அவை ஒவ்வொன்றின் கையிலும் எத்தனை ரூபாய் மீதி இருக்கும்?

சின்னு முயலின் கையில் மீதி உள்ள ரூபாய்

மின்னு முயலின் கையில் மீதி உள்ள ரூபாய்



பொருட்கள் வாங்க அவை கடைக்குச் சென்றன.

கடையில் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதைப் பாருங்கள்.


40 ரூபாய்


20 ரூபாய்


10 ரூபாய்


15 ரூபாய்


35 ரூபாய்


30 ரூபாய்


25 ரூபாய்


5 ரூபாய்

சின்னு முயலிற்கு 55 ரூபாய்க்கு இரண்டு பொருட்கள் வாங்க வேண்டும்.

அது எந்தெந்த விலையிலுள்ள பொருட்களை வாங்கும்?

| | | | | |
|---|---|---|---|---|
| 40 | + | 15 | = | 55 |
|  | + |  | = | 55 |
|  | + |  | = | 55 |

மின்னு முயலிற்கு 45 ரூபாய்க்கு 2 பொருட்கள் வாங்க வேண்டும்.


அது எந்தெந்த விலையிலுள்ள பொருட்களை வாங்கும்?


15 + 30 | [ ]

45

[ ] | [ ]

பல விலைகளுள்ள இரண்டு அல்லது மூன்று பொருட்களைத் தேர்ந்தெடுங்கள். விலைகள் எழுதி நிரப்புங்கள்.





## சிண்டன் எலியின் சாட்டம்




“நாம் பூக்கோலம் அமைத்துக் கொண்டிருந்தால் காய்கறிகளை சிண்டன் எலி கொண்டு சென்று விடும்... வா... நம் தோட்டத்திற்குச் செல்வோம்.....”




சிண்டன் எலி இதே வரிசைப்படி தாவினால் எந்தெந்தக் கட்டங்களில் தாவும். அந்த எண்களை வரிசையாக எழுதுங்கள்.


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 100 | 102 | 104 | | | | |

பிற கட்டங்களில் உள்ள எண்களைக் கண்டுபிடித்து வரிசையாக எழுதுங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 101 | 103 | | | | | |

## விளைபலன்


காய்கறிகள் செடிகளில் விளைந்துள்ளன. செடிச்சட்டிகளுக்கு எண்கள் இடுவோம்.




## தக்காளிச் செடிகள்





படத்தில் உள்ளது போன்று வரிசைப்படி தக்காளிச் செடிகள் வைக்கப்பட்டுள்ளன. எண்கள் இல்லாத செடிகளுக்கு எண்கள் இடுங்கள்...




## எண் பூக்கள்

ஒவ்வொரு சட்டியிலும் வரிசைப்படி எண்கள் எழுதப்பட்டுள்ளன.

விடுபட்ட எண்களைப் பூக்களில் எழுதி நிரப்புங்கள்.



## கட்டங்களை நிரப்புங்கள்

சில கட்டங்களில் எண்கள் எழுதப்பட்டுள்ளன.

அவை எவ்வாறு கிடைத்தது?

| + | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | |
| 2 | | 4 | | | | | | | | |
| 3 | | | | | | | | | | |
| 4 | | | 7 | | | | | | | |
| 5 | | | | | | | 12 | | | |
| 6 | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | |
| 9 | | | | | | | | 17 | | |
| 10 | | | | | | | | | | |


இரண்டு எண்களைக் கூட்டும்பொழுது 10 கிடைக்கும் கட்டங்களைக் கண்டுபிடியுங்கள். எண்கள் எழுதுங்கள். எந்தெந்த எண்களைக் கூட்டினால் 10 கிடைக்கும்?

| | | |
|---|---|---|
| 1 + 9 | 2 + 8 | |
| | | |
| | | |


கட்டத்திலிருந்து வேறொரு எண்ணை எடுங்கள். எந்தெந்த எண்களைக் கூட்டினால் இந்த எண்கள் கிடைக்கும்? கண்டுபிடியுங்கள்.

| 16 | | | |
|---|---|---|---|
| 8 + 8 | | | |
| 7 + 9 | | | |
| | | | |
| | | | |
| | | | |

## வேளாண்மை செய்வோம்




சின்னுமுயலும் மின்னுமுயலும் மரச்சீனி நடத் தீர்மானித்தன. அவை அதற்கான வேலையில் ஈடுபட்டன.



**சின்னு முயலின் தோட்டம்**

## மின்னு முயலின் தோட்டம்



மரச்சீனிக் கம்பு நட்டன.

சின்னு முயல் நட்டது

மின்னு முயல் நட்டது

கூடுதல் நட்டது எது?

எவ்வளவு கூடுதல்?

மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

எப்படிக் கூட்டுவது?

முதலில் 10 வீதமுள்ள வரிசைகளைக் கூட்டிப் பார்ப்போம்.

30 உம் 20 உம் கூட்டினால் 50

மீதியுள்ள 4உம் 8 உம் சேர்ந்தால் 12

அப்படியென்றால் 50 ஐயும் 12 ஐயும் கூட்டினால்

50 உம் 10 உம் 2 உம் = 62

வேறொருமுறை


முதலில் ஒன்றுகளைக் கூட்டினால்

4 உம் 8 உம் 12.

பத்துக்களைக் கூட்டினால் 30 உம் 20 உம் 50

50 ஐயும் 12 ஐயும் கூட்டினால் 62

மாதங்கள் கழிந்தன. மரச்சீனி விளைந்தது. சின்னுமுயல் 7 மரச் சீனி செடிகளைத் தோண்டியது.



ஏராளம் கிழங்குகள்! முயல்கள் வயிறு நிறைய சாப்பிட்டன. நண்பர்களுக்கும் கொடுத்தன. மீதியைச் சந்தையில் விற்கலாம். விற்பதற்கு மீதி எத்தனை உள்ளன? ☐

எப்படிக் கணக்கிடலாம்?

34 லிருந்து 7 ஐக் கழிக்க வேண்டும்.





34 லிருந்து முதலில் 4 ஐக் கழிப்போம்.

$34 - 4 = 30$

இனி 30 லிருந்து மேலும் 3 ஐக் கழித்தால்

$30 - 3 = 27$

அப்படியென்றால் $34 - 7 = 27$

- மின்னு முயல் 28 செடிகளிலிருந்து 9 செடிகளை வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தியது. மீதியைச் சந்தையில் விற்றது. எனில் விற்ற மரச்சீனிச் செடிகள் எத்தனை?
- சின்னுமுயல் 27 மரச்சீனியும் மின்னுமுயல் 19 மரச்சீனியும் சந்தையில் விற்றன. அவை விற்ற மரச்சீனிகள் மொத்தம் எத்தனை?


## எண் எத்தனை?

விடையைக் கீழேயுள்ள வட்டத்தில் எழுதுகள்.

16 + 17 ◯   23 - 8 ◯   44 - 6 ◯   25 + 29 ◯   46 + 35 ◯

# குட்டியானையின் வாழைத்தோட்டம்

வாழை விவசாயத்தைப் பற்றி அறிந்துகொள்ள சின்னு முயலும் மின்னு முயலும் குட்டியானையின் வீட்டிற்குச் சென்றன.




ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் வாழையின் வளர்ச்சியைப் பாருங்கள்.

வாழை குலைவிட்டது எந்த மாதத்தில்? ______




## மாதங்கள்

மாதங்களின் பெயர்களை வரிசையாகக் கட்டத்தில் எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | | | |
| | | | |
| | | | டிசம்பர் |


## நாட்காட்டியில் தேதிகள்

2015 இல் டிசம்பர் மாதக் காலண்டர் கீழே தரப்பட்டுள்ளது. சில தேதிகள் எழுதப்படவில்லை. அவை எவை என்பதைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.




**டிசம்பர் 2015**

| SUN ஞாயிறு | MON திங்கள் | TUE செவ்வாய் | WED புதன் | THU வியாழன் | FRI வெள்ளி | SAT சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | | | 10 | 11 | 12 |
| 13 | 14 | | | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |




## கட்டங்களை நிரப்புங்கள்....

| | | | | |
|---|---|---|---|---|
| 13 ஞாயிறு | 14 திங்கள் | | | |
| | | | | |

## எண்ணடுக்குக் கண்டுபிடிப்போம்

ஞாயிற்றுக் கிழமையின் தேதிகளை வரிசையாக எழுதுங்கள். ☐ ☐ ☐ ☐

திங்கள் கிழமையின் தேதிகளை எழுதுங்கள். ☐ ☐ ☐ ☐

இவற்றில் என்ன சிறப்பை நீங்கள் கண்டீர்கள்?

ஒரு திங்கள்கிழமை 20 ஆம் தேதி என்றால் அதற்கு அடுத்த திங்கள் கிழமை என்ன தேதி ? ☐

அதற்கு அடுத்த திங்கள் கிழமையோ? ☐

டிசம்பர் மாதம் 22 முதல் 31 வரை விடுமுறை என்றால் விடுமுறை நாட்கள் எத்தனை?



## செய்து பார்ப்போம்

## காட்டிலே திருமணம்

கிங்கிணி மானிற்குத் திருமணம் வந்தது. காட்டிலுள்ள அனைவரும் மகிழ்ச்சி யடைந்தனர். விருந்து வைக்க வேண்டும். சங்கரன் குரங்கிற்கு விருந்து நடத்தும் பொறுப்பு.



- கூடுதல் தேங்காய்கள் கொண்டுவந்தது யார்?
- எவ்வளவு கூடுதல்?
- அவர்கள் கொண்டுவந்த தேங்காய்கள் மொத்தம் எத்தனை?
- விருந்திற்காக 55 தேங்காய்கள் வேண்டும். மீதியிருக்குமா?


  இருந்தால் எவ்வளவு?
- அவர்கள் கொண்டுவந்த அன்னாசிப் பழங்கள் மொத்தம் எத்தனை?
- பயன்படுத்தியபின் 8 மீதி வந்தது என்றால்


  பயன்படுத்திய அன்னாசிப் பழங்கள் எத்தனை?
- 100 பப்பாளிப் பழங்கள் பயன்படுத்தினர். மீதி இருக்குமா?

  இருந்தால் எவ்வளவு?


## வேகமாக விடைகாண்போம்


படத்தில் 10 இன் குழுக்களும் அல்லாதவையும் உள்ளன. ஒவ்வொன்றின் எண்ணிக்கையையும் கட்டங்களில் எழுதி அவை ஒவ்வொன்றின் தொகை எவ்வளவு என்று கண்டுபிடியுங்கள்.





மொத்தம்
எண்ணிக்கை





மொத்தம்
எண்ணிக்கை

## எவையெல்லாம் சேர்ந்தால் 100 ஆகும்?

கீழேயுள்ள கட்டங்களில் எந்தெந்த எண்களைக் கூட்டினால் 100 கிடைக்கும்?

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | 45 | 50 | 75 | 10 |
| 28 | 15 | 25 | 35 | 85 |
| 90 | 65 | 40 | 55 | 20 |
| 67 | 60 | 70 | 33 | 72 |

அவற்றைக் கண்டுபிடித்துக் கீழே எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | + | 70 | = | 100 |
| | + | | = | |
| | + | | = | |
| | + | | = | |

உங்கள் நண்பன் கண்டுபிடித்தவற்றுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

## எண்ணடுக்கை நிரப்புங்கள்.

ஒவ்வொரு படத்திலும் மூன்று எண்களுக்கு இடையே உள்ள தொடர்பு என்ன?

இதைப்போல் கடைசி படத்திலுள்ள எண்களை எழுதுங்கள்.

